தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானம் கழகம்
(நிர்வாகக் கிளை)

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| பொறிஞர் ஆ.அசோக்குமார், B.E.,<br>தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு,<br>144, அண்ணாசாலை,<br>சென்னை - 600 002. | அனைத்து தலைமைப் பொறியாளர்கள்,<br>அனைத்து மேற்பார்வைப் பொறியாளர்கள், |

கடித எண்.053486/771/ஜி43/ஜி431/2019, நாள்:11.07.2019.

ஐயா,

பொருள்: நிர்வாகம் - களப்பணியாளர்கள் - மாற்றுவழி உத்தரவு (Diversion Order) — ரத்து செய்வது — குறித்து - அறிவுறுத்தல் வழங்குவது- தொடர்பாக.

-----

களப்பணியாளர்கள் பல்வேறு வட்டங்களில் அவர்களுக்குரிய களப்பணிகளில் (Field work) ஈடுபடுத்தப்படாமல், அலுவலக பணிகளில் மாற்றுவழி (Diversion Order) உத்தரவின் வாயிலாக உபயோகப்படுத்தப்படுவதால், கோட்டங்களில் உள்ள களப்பணிகள் மிகவும் பாதிக்கப்படுவதாக தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு, தலைவர் (ம) மேலாண்மை இயக்குநரிடம் முறையிட்டிருக்கின்றது.

எனவே, கோட்டங்களில் இருந்து மாற்றுவழி (Diversion Order) உத்தரவின் வாயிலாக பணிபுரியும் களப்பணியாளர்கள் சம்பந்தமாக கீழ்க்கண்டுள்ள அறிவுரைகளை உடனடியாக செயல்படுத்துமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

1) களப்பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட மாற்றுவழி உத்தரவுகள் (Diversion Orders) அனைத்தையும் **உடனடியாக** ரத்து செய்து அவர்களின் சொந்த பணியிடங்களுக்கே திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

...2

2) தவிர்க்க முடியாத அவசியமுள்ள நிர்வாகக் காரணங்களுக்காக களப்பணியாளர்களை அலுவலகப்பணிக்கு மாற்றுவழி மூலம் பணியமர்த்த வேண்டியிருந்தால் **தலைமைப் பொறியாளர் மட்டுமே** அதன் அவசியத்தை கூர்ந்தாய்வு செய்து அதிக பட்சமாக 6 மாதங்களுக்கு மட்டுமே வழக்கமான ஒப்புதல் போல் இல்லாமல் அரிதினும் அரிதாக ஒப்புதல் அளித்து செயல்படுத்தலாம்.

3) மேற்கண்ட அறிவுரையினை கவனத்தில் கொள்ளாத பட்சத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது **கடும் நடவடிக்கை எடுக்குமாறும்** இதன்மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

4) மேற்கண்ட அறிவுறுத்தலின்படி ஏற்கனவே வழங்கப்பட்ட மாற்றுவழி உத்தரவுகளை (**Diversion Orders**) ரத்து செய்ததற்கான அறிக்கையை **"17.07.2019"**க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஒப்பம்/---11.07.2019)
(ஆ. அசோக் குமார்)
தலைமைப் பொறியாளர்/பணியமைப்பு

நகல்:- அனைத்து இயக்குநர்கள். ] (பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.)
செயலர் / செயலகக்கிளை.]